### கடந்த ஆண்டை விட கூடுதலாக 425 நெல் கொள்முதல் நிலையங்கள்!

# இந்த ஆண்டு 3,332 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, ஏப்.3-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பேசிய உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, "இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 3,332 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**சேவூர் எஸ். இராமச்சந்திரன்:** திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதி, ஆரணி ஊராட்சி ஒன்றியம் ஆதனூர் ஊராட்சியில் சுமார் 2,000 விவசாயக் குடும்பங்கள் உள்ளனர். விவசாயிகள் பாதிப்படையாத வகையில் ஆதனூர் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்குப் பதிலளிக்கிறேன். ஆதனூர் ஊராட்சிக்குட்பட்ட 7 கிலோ மீட்டர் தொலைவில் ஆரியாப்பாடி மற்றும் தச்சூர் கிராமங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் 6-1-2025 முதல் திறக்கப்பட்டு தொடர்ந்து செயல்பாட்டுக்கு வந்துள்ளது. அதேமாதிரி, ஆரியாப்பாடி கிராமத்தில் 44 விவசாயிகளிடமிருந்து 234.6 Metric ton கொள்முதல் செய்யப்பட்டும், தச்சூர் கிராமத்தில் 69 விவசாயிகளிடமிருந்து 268.84 Metric ton கொள்முதல் செய்யப்பட்டும், 113 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 1,22,77,894 ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், நேரடி கொள்முதல் நிலையம் திறப்பதற்கு முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றப் பின்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினராக இருந்தாலும் சரி, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள், எங்கெங்கெல்லாம் நேரடி கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அதைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்



சித் தலைவர் அவர்கள் தலைமையிலான அந்தக் குழு முடிவு செய்து, தேவைப்படுகின்ற இடத்திலே நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படும். எனவே, உறுப்பினர் அவர்கள் எங்கே நேரடி கொள்முதல் நிலையம் தேவைப்பட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகினால் அங்கே சாத்தியக்கூறு இருந்தால் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்:** ஆதனூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளன; நான் அரசுக்குப் பரிந்துரை செய்கிறேன் என்று எடுத்துக் கூறிச் சென்றார். அவர் அவ்வாறு கூறி ஓராண்டு ஆகியும், இதுவரை நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, ஆதனூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் அவர்கள் வந்து இடத்தைப் பார்வையிட்டுச் சென்றிருப்பதாகச் சொல்கிறீர்கள்.

எனவே, உங்களுடைய கருத்தை ஏற்று, அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு சாத்தியக்கூறு இருந்தால், இன்றே சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அங்கே வந்து ஆய்வு செய்து விரைவில் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மண்டலத்தில், 2024--2025 காரீஃப் கொள்முதல் பருவத்தில் 110 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 27,105 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 5,805 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் சுமார் 66 கோடியே 23 இலட்சத்து 34 ஆயிரத்து 947 ரூபாய் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, எங்கெங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வைக்கிறீர்களோ, அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருக்கின்ற இடங்களில் இந்த ஆண்டு திறக்கப்படும்.

ஏனெனில், தமிழ்நாட்டில் கடந்தாண்டு 2,907 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்தான் திறக்கப்பட்டன. இந்தாண்டு 3,332 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. கடந்தாண்டைவிட கூடுதலாக 425 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டைவிட, இந்தாண்டு இதுவரை 7 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கூடுதலாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

### கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எத்தனை

# ஜவுளித் திறன் பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன?

## மக்களவையில் – கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஏப்.3-

தமிழ்நாட்டில் உள்ள ஜவுளிப் பூங்காக்களை மேம்படுத்தி உலகளவில் போட்டியிடுவதற்கு ஒன்றிய அரசு செய்யும் உதவி என்ன என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு:-



தமிழ்நாடு ஒரு முக்கிய ஜவுளி மையமாக இருப்பதால், இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதிக்கு கணிசமாகப் பங்களிக்கிறது, மேலும் ஜவுளி 2030 என்ற தொலைநோக்குப் பார்வையில் தமிழ்நாட்டிற்கான பங்கு என்ன எனக் கேள்வி எழுப்பினார். ஒன்றிய அரசின் 350 பில்லியன் டாலர் ஜவுளித் தொழில் இலக்கு மற்றும் 100 பில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கில் தமிழ்நாட்டின் ஜவுளித்துறை எந்த அளவுக்கு பங்களிக்கும் எனக் கேள்வி எழுப்பினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஜவுளி உள்கட்டமைப்பிற்காக செய்யப்பட்ட முதலீடுகளின் விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள ஜவுளிப் பூங்காக்களை மேம்படுத்தி உலகளவில் போட்டியிடுவதற்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் ஆதரவு என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் எத்தனை ஜவுளித் திறன் பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டைச் சார்ந்த ஜவுளித் தொழில்கள் நிலையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும், ஜவுளிகள் மறுசுழற்சி முறைக்கு மாறுவதற்கும் வழங்கப்படும் ஊக்கத்தொகைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டின் ஆட்டோமோட்டிவ் மற்றும் மெடிக்கல் டெக்ஸ்டைல்ஸ் போன்ற தொழில்நுட்ப ஜவுளித்துறையில் அதன் பங்கை அதிகரிக்க, தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு நிதி எவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கேள்வி எழுப்பினார்.

---

### பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காக்களை மேம்படுத்த –

# தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் கண்டறியப்பட்ட இடங்கள் - திட்டத்திற்கு நிதி பற்றிய விவரமென்ன?

## மாநிலங்களவையில் கிரிராஜன் கேள்வி – ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஏப்.3-

மல்டி மாடல் லாஜிஸ்டிக் பூங்கா (MMLP) எனப்படும் (எம்எம்எல்பி) பல்முனைய சரக்குப் போக்குவரத்து பூங்காக்களை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் கண்டறியப்பட்ட இடங்கள், இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதி, இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எதிர்பார்க்கப்படும் தாக்கம், திட்டத்தின் செயல்திறனைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரியிடம் திமுக எம்.பி. கிரிராஜன் கேள்விகளை எழுப்பி இருந்தார்.

இவற்றிற்கு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்காரி அளித்துள்ள பதிலில், இந்தியா முழுவதும் பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் லாஜிஸ்டிக் பூங்காக்களை அமைக்க 35 இடங்களை கண்டறிந்துள்ளதாகவும், இதில் தமிழ்நாட்டில் உள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மல்டி மாடல் லாஜிஸ்டிக்ஸ் பூங்காக்களை மேம்படுத்த இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த மல்டி மாடல் கிளஸ்டர்களின் மேம்பாடு ஆகியவை அரசின் தேசிய நெடுஞ்சாலைகள் லாஜிஸ்டிக்ஸ் மேனேஜ்மென்ட் லிமிடெட் (NHLML) உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுவதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இந்த 35 MMLPகளில் அதிகபட்சமாக மும்பை மற்றும் டெல்லியில் தலா 5 அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் அமையவுள்ள MMLPயானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தேசிய நெடுஞ்சாலை சரக்குப் போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML), ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL), சென்னை துறைமுக ஆணையம் (ChPA) ஆகியவற்றை உள்ளடக்கி ரூ.641.92 கோடி செலவில் அமைய உள்ளதாக பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையில் TIDCO 7.8 சதவிகிதம், NHLML 40.18 சதவிகிதம், RVNL 26.00 சதவிகிதம், ChPA 26.02 சதவிகிதம் பங்களிப்பை வழங்க உள்ளதாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது. அதன்படி NHLML ரூ.257.90 கோடியும், TIDCO ரூ. 50 கோடியும் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

MMLPகளின் வளர்ச்சியில் மூலம் சாலை ரயில் சாலை இடையேயான தடையற்ற சரக்கு மாற்றத்துன் மூலம் போக்குவரத்து செலவைக் குறைத்தல், நவீன மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட உட்கட்டமைப்பின் மூலம் சரக்கு கையாளுகையின் செலவுகளை குறைத்தல், பெரிய கிடங்குகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளின் செலவுகளை குறைத்தல், போட்டித் தன்மை வாய்ந்த, நம்பகமான லாஜிஸ்டிக்கை தேர்ந்தெடுப்பதற்கான கூடுதல் வாய்ப்புகள் கிடைப்பதன் மூலமும், உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமும் பயனடைதல் ஆகியவை பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பதாக அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு ஆகியவை இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கு சொந்தமான தேசிய நெடுஞ்சாலைகள் சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனத்தால் செய்யப்படுவதாகவும் திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த MMLLPகளில் இடைநிலை சரக்கு பரிமாற்ற வசதி, கிடங்கு வசதி, ரயில்வே முனையம் மற்றும் இணை பாதை, சுங்க வசதி, கண்டெய்னர் டிப்போ, டிரக் பார்க்கிங் வசதி, அதிக அளவிலான பொருட்கள் சேமிப்புக் கூடம், திறந்த வெளி சேமிப்புக் கூடம், மதிப்பு கூட்டப்பட்ட சேவைக்கான வசதி, மின்சார வாகனங்கள் சார்ஜிங் வசதியுடன் கூடிய எரிபொருள் பம்ப்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் திறன் மேம்பாட்டு மையம் ஆகிய வசதிகள் கிடைக்கும் என்பதும் ஒன்றிய அரசின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# பறவைகளிடத்தும் முதல்வர் காட்டும் பாசம்!

**"கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்"** என்று, சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருப்பதை அவர், காக்கைகள் உள்ளிட்ட பறவைகளுக்கு தானியமும், தண்ணீரும் வார்த்திடும் படத்துடன் சில நாளேடுகள் இன்று செய்தியாக வெளியிட்டுள்ளன. இதைக் காண்போர்தம் இதயம் நிச்சயம் அசைந்து கசிந்துருகும்; பன்முகத் தோற்றம் கொண்ட முதல்வரின் மற்றொரு முகம் 'பளிச்'செனத் தெரியும். பறவைகளிடத்து அவர் கொண்டுள்ள அக்கறையும், அக்கறையில் பிறந்த பேரன்பும், பாசமும் விளங்கும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காக்கைகளுக்கு உண்ண உணவும், அருந்த நீரும் வழங்கிடும் படத்தைப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர், **"பராசக்தி"** திரைப்படத்திலே அமைத்திருந்த அருமையான காட்சி ஒன்று, கண்களின் நினைவினிலே மெல்ல நகர்ந்து செல்வதைத் தொடாமல் தவிர்க்க முடியாது. அந்தக் காட்சியில், காக்கைகளுக்கு உணவூட்டியவாறே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பாடியது, செவிகளின் கரையோரம் தென்றலாய் மோதிச் செல்வதை உணராதிருக்க முடியாது.

உடுமலை நாராயண கவிராயர் இயற்றிய பாடல் அது; இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் கணீர்க் குரலில் பாடிய பாடல்:

**கா கா கா கா கா கா**
**ஆகாரம் உண்ண எல்லோரும் ஒன்றாக**
**அன்போடு ஓடிவாங்க என்ற**
**அனுபவப் பொருள் விளங்க**
**காக்கை அண்ணாவே நீங்க அழகான வாயால்**
**பண்ணாகப் பாடுறீங்க காக்காவென**
**ஒண்ணாகக் கூடுறீங்க!**

**சாப்பாடில்லாமே தவிக்குதுங்க ஜனங்**
**கூப்பாடு போட்டுமனம் குமுறுதுங்க உயிர்**
**காப்பாத்தக் கஞ்சித் தண்ணி ஊத்துங்க, என்றால்**
**தாப்பாளப் போடுறாங்க பாருங்க !**

**எச்சிலைதனிலே எறியும் சோத்துக்கு**
**பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே**
**இளைத்தவன் வலுத்தவன் இனச்சண்டை**
**பணச்சண்டை**
**எத்தனையோ இந்த நாட்டிலே;**

**பட்சி சாதி நீங்க, எங்க பகுத்தறிவாளரைப்**
**பாக்காதீங்க,**
**பட்சமா இருங்க பகுந்துண்டு வாழுங்க**
**பழக்கத்த மாத்தாதீங்க !**

என்ற அந்தப் பாடலில் பகுத்தறிவு, பசி பட்டினி பஞ்சம், பறவைகளிடையே வேற்றுமையற்ற ஒற்றுமை போன்ற நிலைமைகள் நெய்யப் பட்டிருந்தது; தமிழர் சமூகத் தெருக்களில் அன்று இந்தப் பாடல் வரிகள் எதிரொலித்தன!

இன்று காக்கைகள் உள்ளிட்ட பறவைகளின் மீது ஆழ்ந்த இரக்கம் கொண்டு, நெருப்பை இறைக்கும் இப்போதைய வெய்யிலில், முதல்வர் உணவும், நீரும் வழங்கும் காட்சி, ஏராளமான இலக்கிய வரிகளை எண்ணத்தில் கோடிட்டுக் காட்டுகிறது!

**"காக்கை குருவி எங்கள் ஜாதி; நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்றும்; "காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரியநிறம் தோன்றுதைய்யே நந்தலாலா !" என்றும் மகாகவி பாரதி காக்கைகளைக் கொண்டாடினான். அந்தக் கொண்டாட்டத்தை, முதல்வரும் காக்கைகளும் உள்ள படம் மனக்கண் முன்னே கொண்டுவருகிறது !**

அய்யன் திருவள்ளுவர், **" காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள ( தனக்குக் கிடைத்ததை மறைக்காமல், தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும். அந்தக் குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு )"** என்று காக்கையின் குணநலத்தைக் குன்றேற்றிப் புகன்றார். இந்தப் படத்தின் பின்னணியில் அந்தக் குறள் இழையோடிக் கொண்டிருப்பதைக் கண்டு களிக்கலாம்!

**" சேயிறா வெறிந்த சிறுவெண் காக்கை"** என்று நற்றிணையில் காக்கையின் பண்பு போற்றப்படுகின்றது. சீறிப்பாயும் கடல் அலையிடத்தே இறால் மீனைப் பிடித்து வந்த காக்கையொன்று, அதைத் தான்மட்டும் தனித்துண்ண மனமின்றித் தன் பெடைக்கும் கொடுக்க விரும்பி, பெடையை அழைத்து, அதன் வாயில் தானே கொடுத்து மகிழும் நல்லழுகுக் காட்சி, நற்றிணையைக் கற்ற யார்க்கும் கண்ணில் நிறைந்திருக்கும் !

**" மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை"**யை அழைத்து, கிளையோடு உண்ணும் அதன் அன்புடை மரபினைப் பாராட்டும் ஐங்குறுநூறுப் பாடலும், இன்ன பிற சங்கப் பாடல் வரிகளும், காக்கைகளின் ஒற்றுமை, நல்லிணக்கம், பகுத்துண்ணும் மாப்பண்பு ஆகியவற்றை நாமணக்கப் பகர்கின்றன.

**முதல்வரும், காக்கைகளும் இருக்கும் படம், நமது முன்னோரின் அறிவார்ந்த சொற்களுடன், நமக்கு மேலும் பல நற்செய்திகளை எடுத்து வைக்கின்றன !**

** ** **

**கி.இராஜமாணிக்கம்**

** ** **